**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 23 ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 -ம் நாள் வியாழக்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.4/2025</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 187/2022</u>**

1. யசோதாதேவி, க/பெ. நடராஜமூர்த்தி, இந்து,

வயது 41, வசிப்பிடம் கதவு எண்.8/12 ஏ,

அன்னை இந்திரா நகர், மதுக்கரை ரோடு,

சிட்கோ, அஞ்சல், கோயமுத்தூர் 641024. **...மனுதாரர்/ வாதி**

//எதிர்//

1. வேலுச்சாமி, த/பெ. நஞ்சப்பகோனார், இந்து,

வயது 62, வசிப்பிடம் கதவு எண்.46/59, ஊர் கவுண்டர்

வீதி, வெள்ளலூர், கோயமுத்தூர் மாவட்டம் 641111.

2. தனலட்சுமி, க/பெ. வேலுச்சாமி, இந்து, வயது 55,

வசிப்பிடம் கதவு எண்.46/59, ஊர் கவுண்டர் வீதி,

வெள்ளலூர், கோயமுத்தூர் மாவட்டம் 641111.

3. முத்துக்குமார், இந்து, வயது 43, ஸ்ரீ கிருஷ்ணா

கார்டன் உரிமையாளர், 3 வது பேஸ்,

பட்டணம், கோவை - 641016. **... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்**

கட்டளை 6 விதி 17 R/W பிரிவு 151 ன் படி உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவில் கோரியுள்ள திருத்தங்களை தாவாவில் மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்குமாறு, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் - 09.01.2025

மனுவின் மீதான வில்லை - ரூ.20/-

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முத்துக்கிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.லோகநாதன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவாணையுரை**

1. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவு தொகை இல்லை.

**செலவு தொகை பட்டியல்**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## DETAILS OF AMENDMENT

1. தாவாவின் 6 வது பக்கத்தில் தாவா மதிப்பீடு பகுதியில் முதலாவது பரிகாரத்திற்கு பின்னிட்டு 2 வதாக புதிய பரிகாரம் சேர்க்கப்பட வேண்டும்.

2. தாவா 1வது அயிட்ட சொத்தின் வடபுறமாக 5.5 சதுர மீட்டர் அளவிற்கு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து உள்ளதை அகற்றி காலி சுவாதீனம் ஒப்படைக்குமாறு ஒப்படைக்குமாறு வாதி பிரதிவாதிகளின் மீது கோரியுள்ள பரிகாரத்தின் மதிப்பு ரூ.34,925/-

தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 30 ன் கீழ்

வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.

2. தாவாவின் 6 வது பக்கத்தில் தாவா மதிப்பீடு பகுதியில் 2 வது பரிகாரத்திற்கு பின்னிட்டு 3 வதாக புதிய பரிகாரம் சேர்க்கப்பட வேண்டும்.

3. தாவா 2 வது அயிட்ட சொத்தின் வடபுறமாக 9.9 சதுர மீட்டர் அளவிற்கு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து உள்ளதை அகற்றி காலி சுவாதீனம் ஒப்படைக்குமாறு வாதி பிரதிவாதிகளின் மீது கோரியுள்ள பரிகாரத்தின் மதிப்பு ரூ.62,865/-

தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 30 ன் கீழ் வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.

3. தாவாவின் 6 வது பக்கத்தில் பரிகாரம் கோரப்பட்டுள்ள 8 வது பாராவில் (அ) பரிகாரத்திற்கு பின்னிட்டு (அ 1) என சேர்க்கப்பட வேண்டும்.

அ 1. தாவா 1 வது அயிட்ட சொத்தின் வடபுறமாக 5.5 சதுர மீட்டர் அளவிற்கு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து உள்ளதை அகற்றி காலி சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடுமாறும்,

4. தாவாவின் 6 வது பக்கத்தில் பரிகாரம் கோரப்பட்டுள்ள 8 வது பாராவில் (அ 1) பரிகாரத்திற்கு பின்னிட்டு (அ 2) என சேர்க்கப்பட வேண்டும்.

அ 2. தாவா 2 வது அயிட்ட சொத்தின் வடபுறமாக 9.9 சதுர மீட்டர் அளவிற்கு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புகள் செய்து உள்ளதை அகற்றி காலி சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிடுமாறும்,

5. தாவாவின் 4 வது பக்கத்தில் 4 A. என புதிய பாரா சேர்க்கப்பட வேண்டும்.

4A. இந்நிலையில் மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்படும்பொழுது தாவா

சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிவதற்காக வாதி நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்யுமாறும், அரசு நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தினை நில அளவை செய்து அது தொடர்பான அறிக்கையினை தாக்கல் செய்ய உத்தரவிடுமாறும் கோரி I.A.No.3/2022 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனுவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையராக வழக்குரைஞர் திரு.யுவராஜ் என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவர் நில அளவையர் முன்னிலையில் தாவா சொத்தினை அளவீடு செய்து தாவா 1 வது அயிட்ட சொத்தான சயிட் எண்.10 ல் சுமார் 5.5 சதுர மீட்டர் அளவிலும் தாவா 2 வது அயிட்ட சொத்தான சயிட் எண்.11 ல் சுமார் 9.9 சதுர மீட்டர் அளவிலும் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டு உள்ளதாக அறிக்கை வழங்கியுள்ளார்.

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Final order
IA.No.4/2025 in
OS.No.187/2022
Dated:.09.10.2025
DMC, Sulur.